under Section 173 BNSS **FIRST INFORMATION REPORT** **TAMIL NADU POLICE**

(பா.நா.சு.ச. பிரிவு 173 இன் கீழ்) **முதல் தகவல் அறிக்கை** INTEGRATED INVESTIGATION FORM-I

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8101985

1. District : மாவட்டம் Madurai PS: காவல்நிலையம் V KAC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 14/2024 Date: நாள் 27/11/2024

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7(a) of PC Act 1988 as
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: amended by Prevention of
   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: Corruption (Amendment) Act 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 16.11.24 at about 13:30 hrs by A1, 19.11.24 at about 15:00 hrs by A2
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 21.11.24 at about 13:00 & 18:00 by A2, 23.11.24 at about 12:00 by A2, 25.11.24 at about 16:30 & 17:15 by A1, 27.11.24 at about 17:45 by A1 by A2
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.11.2024 Time நேரம் 19:00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.11.2024 Time நேரம் 19:45 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 25 கி.மீ தென்மேற்கு திசை
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகம் திருமங்கலம், மதுரை மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. அஜித்குமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சிவசங்கன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 20/06/1998 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Business (g) Address : முகவரி 14/10, பாண்டிசெல்வரா நகர், ஜோதிவாசல் ரோடு, திருமங்கலம், மதுரை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) ① திருமதி சித்ராதேவி, பிர்கா சர்வேயர், உதவியாளர் பிர்கா பிட்-1, திருமங்கலம் தாலுகா மதுரை மாவட்டம் ② திரு. கண்ணன்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் - இல்லை -

GCP 240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheets attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 11/2024

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

27.11.2024 at 20:35 hrs

Name: பெயர் P.M. RAJESH PRABHU
Rank: நிலை Inspector of Police No. எண் ..........

V KAL
Madurai
27.11.2024

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,**

இன்று 27.11.2024-ஆம் தேதி இரவு 19.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம், திருமங்கலம், சோழவந்தான் ரோடு, பாண்டீஸ்வரா நகர், 14/10-ல் வசிக்கும் சிவநேசன் மகன் திரு.S.அஜித்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் : S.அஜித்குமார், த.பெ. சிவநேசன், 14/10, பாண்டீஸ்வரா நகர், சோழவந்தான் ரோடு, திருமங்கலம், மதுரை மாவட்டம். பெறுநர் : உயர்திரு காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, நான் திருமங்கலத்தில் மேலே சொன்ன விலாசத்தில் எனது பெற்றோருடன் குடியிருந்து வருகிறேன். நான் பி.காம் படித்துள்ளேன். கடந்த 23.07.2021ம் தேதியன்று மதுரை சம்மட்டிபுரத்தில் உள்ள எனது அத்தை வைரமணியும், நானும் கூட்டாக சேர்ந்து திருமங்கலம் உரப்பனூர் பிட்-1 கிராமத்தில் உள்ள ரீசர்வே எண்.58/7B1-ல் உள்ள 40 செண்ட் நஞ்சை நிலத்தை கீழஉரப்பனூர் கிராமத்தை சேர்ந்த ஜெயக்கொடி மற்றும் அவரது தம்பி ரவி அவர்களுக்கு சொந்தமான 10 செண்ட் நிலத்தையும் விலைக்கு வாங்கி அதனை திருமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.5399/2021 பிரகாரம் பதிவு செய்தோம். பின்பு நான் கடந்த 05.01.2023ம் தேதியன்று மேற்படி ரவி அவர்களிடமிருந்து அவருக்கு சொந்தமான உரப்பனூர் பிட்-1 கிராமத்தில் புதிய சர்வே எண்.58/7B1A-யில் உள்ள 4 செண்ட் நஞ்சை நிலத்தினை நான் விலைக்கு வாங்கி அதனை திருமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 159/2023 பிரகாரம் பதிவு செய்தேன். கடந்த 24.10.2024ம் தேதியன்று நான் வாங்கிய அந்த 4 செண்ட் இடத்திற்கு உட்பிரிவு செய்து பட்டா பெறுவதற்காக திருமங்கலம் தாலுகா அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையம் மூலமாக விண்ணப்ப எண். 2024-0105-24-668656 பிரகாரம் பதிவு செய்தேன். இதுசம்மந்தமாக கடந்த 08.11.2024ம் தேதி மாலை சுமார் 06.55 மணியளவில் எனது செல்போன் எண். 83001 49719-ற்க்கு செல்போன் எண். 95140 72385 எண்ணிலிருந்து தொடர்புகொண்டு உரப்பனூர் பிர்கா பிட்-1 சர்வேயர் திருமதி.சித்ரா தேவி அவர்கள் என்னிடம் தன்னை அறிமுகபடுத்திக்கொண்டு நான் பட்டா உட்பிரிவிற்காக விண்ணப்பித்த விவரத்தை கேட்டுக்கொண்டு அதுசம்மந்தமான ஆவணங்களுடன் மறுநாள் (09.11.2024) காலை 11.30 மணியளவில் திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து அவரை சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார். அதன்படி நானும் மறுநாள் காலை 11.30

மணிக்கு திருமதி.சித்ராதேவி கூறியபடி திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று அங்கு முதல் மாடியில் உள்ள திருமதி.சித்ராதேவி-யின் அறைக்கு சென்று அவர்களை சந்தித்து நான் வாங்கியிருந்த 4 செண்ட் நிலத்திற்கான ஆவணங்களை காண்பித்தேன். நாங்கள் வாங்கிய இடத்திற்கான தாய் பத்திரத்தை களப்பணிக்கு தான் வரும்போது காண்பிக்க வேண்டும் என்றும், களப்பணி சம்மந்தமாக உங்களது செல்போனுக்கு தகவல் வரும் என தெரிவித்தார். பிறகு நான், அவரிடம் நானும், எனது அத்தை வைரமணி அவர்களும் அதே சர்வே நம்பரில் வாங்கியிருந்த 50 செண்ட் நிலத்திற்கான ஆவணங்களை காண்பித்து அதற்கும் உட்பிரிவு பட்டா பெறவேண்டும் என கேட்டேன். அதற்கு அவர் என்னிடத்தில், இந்த 50 செண்ட் நிலத்திற்கும் இ-சேவை மூலமாக உட்பிரிவு பட்டா கேட்டு விண்ணப்பித்து விடுங்கள். அந்த 50 செண்ட் நிலத்திற்கு என தனியாக குறுஞ்செய்தி உங்கள் செல்போனிற்கு வராது என்றும், அதுவும் 4 செண்ட் நிலத்திற்கான சர்வே எண் ஒரே எண்தான் என்பதால், அவற்றை நான் ஒன்றாக பார்த்துவிடுகிறேன் எனக் கூறினார். நான் சரியென கூறிவிட்டு வந்துவிட்டேன். மறுநாள் 10.11.2024ம் தேதியன்று மதியம் சுமார் 12.45 மணிக்கு எனது செல்போன் எண்ணிற்கு எனது இடத்தை உட்பிரிவு பட்டா வழங்குவதற்காக அன்றையதினமே களப்பணி செய்ய இருப்பதாகவும், அதற்குரிய ஆவணங்களை தயார் நிலையில் வைத்திருக்கும்படி குறுஞ்செய்தி வந்தது. ஆனால் அன்றையதினம் அவர்கள் வரவில்லை. மீண்டும் மறுநாள் 11.11.2024ம் தேதியன்று இரவு சுமார் 10.00 மணியளவில், வரும் 18.11.2024ம் தேதியன்று எனது இடத்தை களப்பணி செய்ய இருப்பதாகவும், எனவே அதற்குரிய ஆவணங்களை வைத்திருக்கும்படி குறுஞ்செய்தி வந்தது. பின்பு கடந்த 12.11.2024-ம் தேதியன்று, எனது அத்தை வைரமணி அவர்களிடம் சித்ரா தேவி அவர்கள் கூறிய விபரங்களை சொல்லிவிட்டு, நானும் அவரும் சேர்ந்து வாங்கிய 50 செண்ட் நிலத்திற்கு உட்பிரிவு செய்து பட்டா வாங்குவதற்காக திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்தில் விண்ணப்பித்தேன். பிறகு கடந்த 15.11.2024ம் தேதியன்று மாலை சுமார் 06.00 மணியளவில் பிர்கா சர்வேயர் திருமதி.சித்ராதேவி அவர்கள் அவரது செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணிற்கு தொடர்புக்கொண்டு மறுநாள் காலையில் தனது அலுவலகத்திற்கு ஆவணங்களுடன் வந்து அவரை மீண்டும் சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார். அதன்படி மறுநாள் 16.11.2024ம் தேதியன்று காலை சுமார் 11.00 மணிக்கு திருமதி.சித்ராதேவி அவர்களின் அலுவலக அறைக்கு சென்று அவரை

சந்தித்தேன். அவர் நாங்கள் வாங்கிய 50 செண்ட்டிற்கான நிலம் மற்றும் நான் வாங்கிய 4 செண்ட் நிலத்திற்கான தாய்பத்திரத்தின் நகலை வாங்கி பார்த்துவிட்டு, நீங்கள் சென்று தயார் நிலையில் இருங்கள் நான் உங்களிடம் தகவல் தெரிவித்துவிட்டு உங்களது இடத்தை இன்றே களப்பணி செய்துவிடுகிறேன் எனக் கூறி என்னை அனுப்பிவைத்தார். பிறகு மதியம் சுமார் 01.00 மணியளவில் திருமதி.சித்ராதேவி என்னை செல்போனில் தொடர்பு கொண்டு தான் கீழஉரப்பனூர் வி.ஐ.பி. நகர் அருகே நிற்பதாகவும், உடனே அவரை வந்து சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார். நான் சுமார் 5 நிமிடத்தில் அவர் சென்ன இடத்திற்கு சென்றேன். அங்கு திருமதி.சித்ராதேவி ஒரு ஆண் நபருடன் இருசக்கர வாகனத்தில் வந்து நின்றுகொண்டிருந்தார். அவர் என்னிடம் எங்களது நிலத்திற்கு அவரை அழைத்து செல்லும்படி கேட்டுக்கொண்டார். நான் எனது இருசக்கர வாகனத்தில் முன்னே செல்ல அவர் அந்த நபருடன் அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தில் என்னை பின்தொடர்ந்து எனது நிலத்திற்கு வந்து, எங்களது 50 செண்ட் மற்றும் 4 செண்ட் நிலத்தையும் பார்வையிட்டு, எங்களது நிலத்தை அளந்தார்கள். பிறகு சிறிது நேரம் கழித்து மதியம் சுமார் 01.30 மணிக்கு அவர் தன்னுடன் வந்த அந்த நபரை காண்பித்து இவரது பெயர் கணேசன் என்றும், தனது உதவிக்காக அவரை வைத்திருப்பதாக கூறி எனக்கு அந்த நபரை அறிமுகப்படுத்தினார். பின்னர் திருமதி.சித்ராதேவி என்னிடத்தில் ஒரு பட்டாவிற்கு ரூ.5000/- வீதம் இரண்டு பட்டாவிற்கும் சேர்த்து ரூ.10,000/- செலவாகும் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் அது அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணமா என்று கேட்டேன். அதற்கு அவர் தனது செலவிற்காக கொடுக்க வேண்டிய பணம் அது என்று கூறினார். நான் அவரிடம் பணத்தை சற்று குறைத்துக்கொள்ளுங்கள் எனக்கேட்டேன். அதற்கு அவர் பணத்தை என்னால் குறைக்க முடியாது நீங்கள் பணத்தை சீக்கிரம் ஏற்பாடு செய்துவிட்டு கணேசனிடம் அதனை கொடுத்துவிடுங்கள் நான் உடனே உங்களுக்கு உட்பிரிவு பட்டா கிடைப்பதற்கு சிபாரிசு செய்து அனுப்பி பட்டா கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் எனக் கூறினார். அப்போது அவருடன் இருந்த கணேசன் அவர்கள் எனது செல்போன் எண்ணை கேட்டார். நான் அவரிடம் எனது மற்றொரு செல்போன் எண்ணான 80726 51414 ஐ அவரிடம் கூறினேன். அவர் அதனை குறித்துகொண்டார். பின்பு அவர்கள் சென்றுவிட்டார்கள். இதுசம்மந்தமாக நான் எனது அத்தை வைரமணியிடம் நடந்தவற்றை கூறி பிர்கா சர்வேயர் சித்ராதேவி ரூ.10,000/- லஞ்சம் கேட்பது பற்றி கூறினேன். அதற்கு அவர் மிகவும் வருத்தப்பட்டார். பிறகு கடந்த 19.11.2024ம் தேதியன்று மதியம் சுமார் 03.00

மணியளவில் எனது செல்போன் எண் 80726 51414-க்கு 95850 72385 என்ற செல்போன் எண்ணிலிருந்து போன் செய்து கணேசன் தன்னை அறிமுகப்படுத்தி கொண்டு, பின்னர் பிர்கா சர்வேயர் சித்ராதேவி கூறியபடி ரூ.10,000/- ஏற்பாடு செய்துவிட்டீர்களா, உடனே கொண்டு வாருங்கள் என்று சொன்னார். அந்த சமயத்தில் செல்போன் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. உடனே அதே எண்ணிலிருந்து மீண்டும் கணேசன் என்னை தொடர்புகொண்டு சித்ராதேவி கேட்ட பணம் சம்மந்தமாக பேசினார். நான் அவரிடம் பணத்திற்காக தான் அலைந்து கொண்டு இருக்கிறேன், விரைவில் ஏற்பாடு செய்துவிடுகிறேன் என கூறினேன். பிறகு கடந்த 21.11.2024ம் தேதியன்று மதியம் சுமார் 01.00 மணியளவில் திரு.கணேசன் அவரது செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு உட்பிரிவு பட்டாவிற்காக சித்ராதேவி கேட்ட பணத்தை ஏற்பாடு செய்துவிட்டீர்களா எனக் கேட்டார். நான் அவரிடம் ஒருவரிடம் பணம் கேட்டுள்ளேன், இன்று சாய்ந்திரம் பணம் கிடைப்பற்கு வாய்ப்புள்ளது எனக் கூறினேன். அதற்கு அவர் சீக்கிரம் ஏற்பாடு செய்யுங்கள், இல்லையென்றால் உங்களது விண்ணப்பங்கள் கேன்சல் ஆகிவிடும் என்று பிர்கா சர்வேயர் சொன்னதாக என்னிடம் கூறினார். பின்பு அன்று மாலை சுமார் 06.00 மணியளவில் திரு.கணேசன் மீண்டும் எனது செல்போனில் அவரது செல்போன் மூலமாக தொடர்புகொண்டு பணத்தை பற்றி கேட்டார். நான் அவரிடம் நான் எதிர்பார்த்த பணம் கிடைக்கவில்லை எனக் கூறினேன். அதற்கு அவர் சித்ராதேவி அவர்கள் பணத்தை சீக்கிரம் வாங்குங்கள் எனக் கூறியுள்ளார், எனவே விரைவில் கொடுக்கும்படி கேட்டார். பிறகு கடந்த 23.11.2024ம் தேதியன்று திரு.கணேசன் அவர்கள் மதியம் சுமார் 12.00 மணியளவில் அவரது செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணிற்கு தொடர்புகொண்டு பணத்தை பற்றி கேட்டார். நான் அவரிடத்தில் அவசராமாக ஸ்ரீவில்லிபுத்தூர் வந்துவிட்டேன், அதனால் பணம் ஏற்பாடு செய்ய இயலவில்லை எனவே வரும் திங்கட்கிழமை அன்று நேரில் வந்து சந்திக்கிறேன் எனக் கூறினேன். பிறகு கடந்த 25.11.2024ம் தேதியன்று மாலை சுமார் 04.00 மணியளவில் திரு.கணேசன் அவரது செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணிற்கு தொடர்புகொண்டு என்னை நேரில் வந்து பிர்கா சர்வேயர் திருமதி.சித்ராதேவி அவர்களை சந்திக்கும்படி கேட்டுகொண்டார். அதன்படி அன்று மாலை சுமார் 04.30 மணிக்கு திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று திருமதி.சித்ராதேவி அவர்களை அவரது அலுவலக அறையில் சந்தித்தேன். அப்போது அவர் நான் கேட்ட பணத்தை

கொண்டு வந்தீர்களா எனக் கேட்டார். அதற்கு நான் அவரிடம் பணத்தை புரட்டுவது கஷ்டமாக உள்ளது, எனவே பணத்தை கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் எனக்கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் சரி ஒரு பட்டாவிற்கு ரூ.2,500/- வீதம் இரண்டு பட்டாவிற்கு ரூ.5,000/-த்தை 27.11.2024ம் தேதியன்று காலையில் என்னிடமோ அல்லது கணேசனிடமோ போனில் பேசிவிட்டு பணத்தை கொண்டுவந்து கொடுங்கள், பிறகு நான் உங்களுக்கான உட்பிரிவு பட்டாவிற்கு சிபாரிசு செய்து அனுப்பி உங்களுக்கு பட்டா கிடைக்க ஏற்பாடு செய்கிறேன், இல்லையென்றால் உங்கள் விண்ணப்பங்கள் கேன்சல் ஆகிவிடும், மற்ற விவரங்களை கணேசனிடம் கேட்டுக்கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டார். பின்பு நான் அவ்வலுவலகத்திற்கு வெளியே வந்து கணேசனின் செல்போன் எண்ணிற்கு எனது செல்போன் எண்ணிலிருந்து தொடர்பு கொண்டு சித்ராதேவி அவர்களை பார்த்துவிட்டேன், உங்களை பார்க்க சொல்லியுள்ளார் எனக்கூறினேன். உடனே அவர் அங்கேயே இருங்கள் நான் வருகிறேன் என்று கூறி சுமார் இரண்டு நிமிடத்தில் என்னை வந்து பார்த்தார். நான் அவரிடம் சித்ராதேவி அவர்கள் உங்களிடம் உட்பிரிவு பட்டாவிற்காக ஒரு பட்டாவிற்கு ரூ.2500/- வீதம் ரூ.5000/- ஐ 27.11.2024ம் தேதியன்று காலையில் அவரிடமோ அல்லது உங்களிடமோ போனில் பேசிவிட்டு பணத்தை கொண்டுவந்து அவரிடமோ அல்லது உங்களிடமோ கொடுக்கச் சொன்னார் எனக் கூறினேன். அதற்கு கணேசன் சரி நான் சித்ராதேவி அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் முதலில் அவர் கூறியபடி போனில் எங்களிடம் பேசிவிட்டு ரூ.5000/-த்தை வந்து கொடுங்கள், பிறகு அவர் உங்களது பட்டாக்களுக்கு சிபாரிசு செய்து அவற்றை விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்துவிடுவார் எனக் கூறிவிட்டு சென்றுவிட்டார். சிறிது நேரம் கழித்து நான் அவ்வலுவலகத்தைவிட்டு சற்று தள்ளி மாலை சுமார் 05.15 மணிக்கு மதுரை ரோட்டில் நின்றுகொண்டிருந்தபோது, கணேசன் அவர்கள் சித்ராதேவி அவர்களை அழைத்துக்கொண்டு மதுரையை நோக்கி இருசக்கர வாகனத்தில் சென்றார். அப்போது கணேசன் என்னை பார்த்தவுடன் அவ்வாகனத்தை என்னருகில் நிறுத்தினார். அப்போது அவருடன் இருந்த சித்ராதேவி கணேசனிடம் கூறிவிட்டேன், நான் கூறியபடி போனில் பேசிவிட்டு ரூ.5000/-த்தை கொண்டுவந்து கொடுங்கள் எனக் கூறிவிட்டு கணேசனுடன் சென்றுவிட்டார். இன்று 27.11.2024ம் தேதியன்று காலை சுமார் 10.45 மணிக்கு சித்ராதேவி அவர்கள் கூறியபடி, நான் எனது செல்போன் எண் 83001 49719-லிருந்து அவரது செல்போன் எண் 95140 72385-க்கு போன் செய்தேன். அவர் எனது அழைப்பை

எடுத்தவுடன், நான் அஜித் பேசுகிறேன் என்று கூறினேன். அந்த சமயத்தில் அவரது இணைப்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. எனவே நான் அவர் ஏதோ முக்கிய வேலையாக இருக்கிறார், தொந்தரவு செய்ய வேண்டாம் என நினைத்து கணேசனின் செல்போன் எண். 95850 72385-க்கு எனது மற்றொரு செல்போன் எண் 80726 51414-லிருந்து தெடர்பு கொண்டேன். அவர் அதனை அட்டண்ட் செய்து என்னிடத்தில் நாங்கள் வேறொரு முக்கிய வேலையில் இருக்கிறோம். எனவே சாயந்திரமாக செல்போனில் பேசும்படி கூறிவிட்டு தொடர்பை துண்டித்துவிட்டார். கணேசன் கூறியபடி இன்று மாலை சுமார் 05.45 மணிக்கு அவரை எனது செல்போனிலிருந்து அவரது செல்போனிற்கு தொடர்புகொண்டேன். அப்போது அவர் என்னிடம் சித்ராதேவி அவர்கள் காலையில் நீதிமன்றத்திற்கு சென்றுவிட்டார். எனவே இன்று உங்களை பார்க்க இயலவில்லை. நாளை காலை 11.00 மணிக்கு சித்ராதேவியின் அலுவலக அறைக்கு வந்து அவர் கூறியபடி ரூ.5000/-த்தை அவரிடம் கொடுத்துவிடுங்கள் அல்லது அவர் என்னிடம் கொடுக்க சொன்னால் என்னிடம் வந்து அதனை கொடுங்கள் நான் அவரிடம் கொடுத்துவிடுகிறேன். உங்களுக்கு அவர் உட்பிரிவு பட்டா கிடைப்பதற்கு உடனே ஏற்பாடு செய்துவிடுவார் என்று கூறினார். நானும் சரியென சொல்லிவிட்டேன். பிறகு இத்தகவலை எனது அத்தை வைரமணி அவர்களிடம் தெரிவித்தேன். அவரும் வருத்தப்பட்டு, அரசு வேலை செய்ய லஞ்சம் கேட்கிறார்கள் என்றார். எங்களுக்கு ரூ.5000/- லஞ்சமாக கொடுத்து உட்பிரிவு பட்டாக்கள் பெறுவதற்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சம் கேட்கும் உரப்பனூர் பிட்-1 பிர்கா சர்வேயர் சித்ராதேவி மற்றும் அவருக்கு உதவியாக இருக்கும் திரு.கணேசன் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு இம்மனுவை கொடுக்கிறேன். இத்துடன் எனது விண்ணப்பத்துடன் இணைத்த ஆவணங்களான அத்தை வைரமணி அவர்கள் பெயரிலும், எனது பெயரிலும் உள்ள கிரைய ஆவண எண். 5399/2021, எனது பெயரில் உள்ள கிரைய ஆவண எண்.159/2023, மேற்படி இடங்களுக்கான தாய்ப்பத்திரம் ஆவண எண்.799/2017, உரப்பனூர் கிராம சர்வே எண்.58/7-ன் வில்லங்க சான்று, உரப்பனூர் கிராம சர்வே எண்.58-ன் புலப்படம் ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும் பிர்கா சர்வேயர் திருமதி.சித்ராதேவி மற்றும் அவரது உதவியாளர் திரு.கணேசன் ஆகியோர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இப்படிக்கு (ஒ-ம்) XXXXXX (S.அஜித்குமார்), 27/11/2024

Sir, Received the typed complaint on 27.11.2024 at 19.00 hrs, the genuineness of the complainant and the accused were verified through sources. The complainant is found to be genuine however, the integrity and antecedents of the accused is found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and I have registered a case in Madurai Vigilance and Anti Corruption Cr. No. 14/2024 u/s 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 19.45 hrs and took up investigation. Sd./-XXXXXX (P.M. Ramesh Prabhu) 27.11.2024, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr. S.Ajithkumar, S/o. Sivanesan, 14/10, Pandeeshwara Nagar, Sholavanthan Road, Thirumangalam, Madurai District along with copy of Sale deed Nos. 5399/2021 and 159/2023 of Thirumangalam Sub-Registry, copy of Parent document No.799/2017, Certificate of Encumbrance of Urappanur Village Survey No.58/7 and FMB of Urappanur bit-1 Village Survey No.58 are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

(P.M. Ramesh Prabhu)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.
27.11.2024